# கிராமப்புற நூலகங்களும் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளும்: வாழைச்சேனை பிரதேச நூலகங்களை மையப்படுத்திய ஆய்வு

முபாரக் பாத்திமா பர்வின்[1], அஹ்மத் லெப்பை பாத்திமா ஹிமாயா[2]

[1,2] South Eastern University of Sri Lanka
farvinmubarak460@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

நூலகங்கள் என்பது ஒரு சமூகத்தின் அறிவின் அடையாளம். ஒரு நூலகத்தின் வளர்ச்சிக்கு அச் சமூக மக்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தினை பொறுத்தே அச் சமூக மக்களது அறிவின் தரம் மற்றும் அறிவுத் தேடலில் அவர்களுக்கு உள்ள ஆர்வமும் கணக்கிடப்படுகின்றது. இதனை அடிப்படையாக கொண்டு கிராமப்புற மக்கள் நூலக மேம்பாட்டிற்கு எத்தகைய பங்களிப்பை ஆற்றுகின்றனர்? நூலகத்தை எந்தளவு பயன்படுத்துகின்றனர்? நூலக ஊழியர்கள் எந்தளவு தம் பொறுப்புணர்ந்து செயற்படுகின்றனர்? மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தினது பங்கு கிராம மட்ட நூலகங்களில் எவ்வாறு காணப்படுகிறது? என்பனவற்றை வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள நூலகங்களை மையப்படுத்திய ஆய்வாக இது காணப்படுகிறது. மேலும் எம் இளம் தலைமுறை சிறந்த கல்வியியலாளராக பல்வேறு துறைகளிலும் ஆற்றல் கொண்டவராக தடம்பதிக்க வேண்டும் அதற்கு பாடசாலை, கிராம மட்ட நூலங்களுடனான அவர்களது தொடர்பை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவு சேகரிக்கும்முறை தரவு பகுப்பாய்வு முறை என்பன இவ்வாய்வின் முக்கிய அம்சங்களாகும். இவ்வாய்வுக்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரகள் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதனுள் அளவுமற்றும் பண்பு ரீதியான தரவுகள் உள்ளடக்கப்பட்டன. இவ்வாய்வை மேற்கொள்ள எழுமாறாக சுமார் 30 மாணவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. அத்தோடு நூலக ஊழியர்கள், பொதுமக்கள் போன்றோரிடம் பெறப்பட்ட நேர்காணல் மற்றும் அவதானிப்பு முறைகள் மூலம் பண்பு ரீதியான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டள்ளது.

முதல் நிலைத்தரவுகள் வாழைச்சேனை பிரதேச நூலகத்தின் நேர்மறையான மற்றும் எதிர் மறையான தாக்கங்களை அறிந்து கொள்ளும் வகையிலும், இரண்டாம் நிலைத்தரவுகள் ஒரு சிறந்த நூலகத்தின் பங்கு என்ன? என்பதை அறிந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளன. இதில் வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள 3 பாடசாலை நூலகங்கள், 2 பொது நூலகங்கள், 1 சன சமூக வாசிப்பு மையம் என்பன ஆய்வு மாதிரிகளாக கொண்டு ஆய்வு செய்யப்பட்டன. ஆய்வு முடிவில் இக் கிராமத்திலுள்ள நூலகங்கள் எதிர் நோக்கும் இடர்கள் அடையாளம் காணப்பட்டு, அதற்கான மாற்று வழிகளும் முன்வைக்கப்பட்டன. மேலும் நூலகத்தின் பெறுமதியை உணர்ந்த, அதற்கான தகுதியும் தரமும் வாய்ந்த ஊழியர்கள் வேலைக்கமர்த்தப்படும் போது ஓர் சிறந்த ஆளுமையை உருவாக்க கூடிய, நவீன முறையிலான சிறந்த தரத்துடன் கூடிய நூலகம் உருவாகும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

**கலைச் சொற்கள்:** நூலகங்கள், கல்வி முன்னேற்றம், நூலகப்பயன்பாடு, மாணவர்களின் வாசிப்பு.

## அறிமுகம்

சமூக சேவையின் ஓர் அங்கமாக நூலகம் காணப்படுகிறது. பல தசாப்தங்களாக பெறப்பட்ட அறிவை சேமிக்கும் ஓர் களஞ்சியமாக நூலகங்கள் திகழ்கின்றன. சமூகத்தின் அங்கீகாரம் பெற்ற பல பெரியார்களதும் மற்றும் அறிஞர்களதும் அடிநாதமாய் திகழ்ந்தது ஓர் சிறந்த நூலகமே ஆகும். நூலகத்தின் தோற்றம் பற்றிய வரலாற்று ஏடுகளில் அன்ரூ கார்னகி என்பவரின் பெயர் அழியா ஒன்றாகும். இவர் நூலகங்கள் என்பவை உயர் வர்க்கத்தினர் மட்டுமே அனுக முடியும் என்ற நிலையில் இருந்த காலகட்டத்தில் பொது நூலக சிந்தனையில் அதிக அக்கறை காட்டிய உயர் தொழிலதிபர் ஆவார். 1880 களில் அமெரிக்காவில் மட்டுமல்லாது பிரிட்டன், கனடா போன்ற பல இடங்களிலும் பொது நூலகங்களை ஸ்தாபிப்பதில் அதிக ஆர்வம் காட்டியவராவார். அதற்காய் தன் தனிப்பட்ட சொத்துக்களை நன்கொடையாய் கொடுத்தார். தன் சொந்த செலவில் 'ஐக்கிய அமெரிக்காவில் 1689 நூலகங்களையும் மேலும் பிரித்தானியா மற்றும் அயர்லாந்து தேசங்களில் 660 நூலகங்களையும், கனடாவில் 125 நூலகங்களையும், மொத்தமாக 2507 நூலகங்களை தன் சொந்த செலவில் கட்டினார்.

இதனடிப்படையில் உருவாக்கப்பட்ட நூலக வரலாற்றை நோக்கும் போது கி.மு 103 -77 களில் கோயில் சார் நூலகங்கள் தோன்றி இருந்தாலும் சந்தா செலுத்தும் நூலகங்கள் பிரித்தானியாவின் ஆட்சிக்காலத்திலேயே உருவாக்கப்பட்டன. 19 ஆம் நூற்றாண்டில் முதல் நூலகம் கொழும்பில் உருவாக்கப்பட்டது. இதுவே இலங்கையின் பொது நூலகத்தின் முன்னோடியாக காணப்படுகிறது ஆனாலும் சிறுவர் நூலகத்தின் முன்னோடியாக யாழ்ப்பாண நூலகம் காணப்படுகிறது. இச் சிந்தனையை அடியொட்டி ஆரம்பிக்கட்டதே இன்றைய பொது நூலகங்கள், 1960 களில் இலங்கை கல்வி நூற்றாண்டு நிறைவை யொட்டி நாடெங்கிலும் 100 புதிய பாடசாலை நூலகங்கள் நிறுவப்பட்டன. இவை படிப்படியாக வளர்ச்சியடைந்து கிராம மட்டதிதில் பாடசாலை நூலகங்கள் தோன்ற காரணமானது. பாடசாலை நூலகங்கள் அதிகரிப்புக்கு ஏற்ப அவற்றின் சேவைத் தரம் வளர்ந்துள்ளதா என்பதை வாழைச்சேனை கிராம பாடசாலை நூலகங்களை வைத்து ஒப்பிடும் போது அவை பெயரளவிலேயே நூலகங்களாக காணப்படுகின்றன.

மேற்படி வரலாற்றை சொந்தமாக கொண்டவர்களா ''நாம்'' என்று வியக்கும் அளவிற்கு எமது சமூகத்தின் நிலைப்பாடு மாற்றம் பெற்றுள்ளது.இன்றைய நிலைமையை சீர்செய்வதற்குரிய வீட்டிற்கு அடுத்தபடியபன முதற்தளமாக பாடசாலை நூலகங்களே காணப்படுகின்றன. ஏனெனில் வீட்டுச்சூழலிருந்து வெளியுலகிற்கு குழந்தை பிரவேசிக்கும் முதலாவது இடமாக பாடசாலைகள் காணப்படுவதால் குழந்தையின் வாசிப்புப் பழக்கத்திற்கு அடித்தளமிடும் சிறந்த வாய்ப்பு பாடசாலை நூலகத்திற்கு காணப்படுகின்றது.

மேலும் குறித்த ஒரு பாடம் பற்றிய விரிந்த ஒரு பார்வையை அறிந்து கொள்ளும் பேராவலை மாணவர்களிடத்தில் தூண்டி நூலகத்துடன் இணைத்து விடுபவராக ஆசிரியர்களும் பாடசாலைச்சமூகமும் இருக்க வேண்டும் உதாரணமாக, ஒரு மொழியை கற்பிக்கும் ஆசிரியர் அம்மொழியில் உள்ள இலக்கியங்களை தேடி சுவைக்கும் ஆற்றலை பாடநூலுக்கு அப்பால் குறித்த மாணவர்களை நூலகத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்த முடியும். ஆனால் இன்று பரீட்சை மையக்கல்வி போதிக்கப்படுவதும் அதில் 100/100 புள்ளிகளைப் பெறும்

மாணவர்கள் சிறப்பானவர்களாக திறமைசாலிகளாக கருதப்படுகின்ற நிலையாகவும் மாறிவிட்டது. மனப்பாடம் செய்தல் கல்வி பெறுதல் அல்ல என்பதையும் அவர்கள் நினைவாற்றலர்களே என்பதையும் தவிர அவர்கள் கல்வியலாளர்கள் அல்ல என்பவை இன்னும் சமூகம் உணரவில்லை. அத்தோடு இவ்வாறான பாடசாலைகளில் நூலகத்தில் காணப்படும் நூல்கள் வேண்டப்படாத சுமைகளாக மாறியுள்ளன. நூலக நூல்கள் கட்டி வைக்கப்பட்டுள்ளன. ''இன்றைய உலகில் ஒரு மனிதன் காலத்தோடு ஒன்றியவனாக இருக்க வேண்டுமாயின் அவன் நாளாந்தம் குறைந்தது நான்கு பத்திரிகைகளையும் வாராந்தம் இரண்டு வார சஞ்சிகைகளையும் மாதாந்தம் ஒரு மாத வெளியீடுகளையும் வாசிக்க வேண்டும்''(ஆதர் சீ கிளார்க் 2007) இதற்கு மாற்றமாக இன்றைய மாணவர்கள் எத்தகைய வரலாற்றறிவும் சமூக நடப்புகளும் உலக அறிவுப் பரப்பும் அறியாப்போலிப் படிப்பாளிகளாக வளர்த்தெடுக்கப்படுகின்றனர்.

ஆகவே எம் இளம் தலைமுறை சிறந்த கல்வியியலாளராக பல்வேறு துறைகளிலும் ஆற்றல் கொண்டவராக தடம்பதிக்க பாடசாலை, கிராம மட்ட நூலகங்களது பங்களிப்பு அவசியம் என்பதை முன்னிறுத்தி மட்டக்களப்பு மாவட்ட, கோறளைப்பற்று மத்தியில் அமையப்பெற்றுள்ள வாழைச்சேனை பிரதேச நூலகங்களை மையப்படுத்தி ''கிராமப்புற நூலகங்களும் அவை எதிர்நோக்கும், பிரச்சினைகளும்'' என்ற தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வு முறையியல்

குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசமான வாழைச்சேனை பிரதேச நூலகங்களை மையப்படுத்தி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திலும், மக்களது அறிவு ரீதியான முன்னேற்றத்திலும் நூலகங்களின் பங்களிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை சிறப்பாக எடுத்துச் செல்ல காரணமாகவுள்ள தரவுமுறையியலானது ஆய்வின் முக்கிய பகுதியாக உள்ளது. இங்கு தரவுகளின் வகை, தரவு சேகரிக்கும்முறை தரவு பகுப்பாய்வு முறை என்பன இவ்வாய்வின் முக்கிய அம்சங்களாகும். இவ்வாய்வுக்கு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதனுள் அளவுமற்றும் பண்பு ரீதியான தரவுகள் உள்ளடக்கப்பட்டன.

இவ்வாய்வை மேற்கொள்ள எழுமாறாக சுமார் 30 மாணவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. அத்தோடு நூலக ஊழியர்கள், பொதுமக்கள் போன்றோரிடம் பெறப்பட்ட நேர்காணல் மற்றும் அவதானிப்பு முறைகள் மூலம் பண்பு ரீதியான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டது.

## இலக்கிய மீளாய்வு

இத்தலைப்பைப் பொருத்தவரையில் பெருமளவில் ஆய்வுகள் செய்யப்படாத போதிலும் சில நூல்கள், பல கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

என். செல்வராஜா அவர்களால் எழுதப்பட்டு ( ஒக்டோபர் 1989 ) வெளியிடப்பட்ட நூலான ''கிராமிய நூலகங்களும், அபிவிருத்தியும்'' என்ற நூலில் நூலகங்களின் முக்கியத்துவம், கிராமிய நூலகங்களின் வகைகள் மற்றும் அவை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பன தெளிவாய் முன்வைக்கப்பட்டுள்ளன.

எம்.பீ.எம் பைறூஸ் அவர்களால் எழுதப்பட்டு (2003) வெளியிடப்பட்ட நூலான ''நூலகங்களில் தகவல் தொழிநுட்பம்'' என்ற நூலில் தகவல் தொழிநுட்ம் வளர்ச்சி அடைந்துள்ள இத்தகைய காலகட்டத்தில் நூலகங்களில் அவை எந்தளவு பங்களிப்புச் செய்கிறது என்பது பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சில்வஸ்டர் ஒ.அனி அவர்களால் எழுதப்பட்டு (டிசம்பர் 2014) இணையத்தளத்தில் வெளியான "Improving Public Library Services for Rural Community Development" என்ற ஆய்வுக் கட்டுரையில் ஆபிரிக்கா பிரதேசத்தை மையப்படுத்தி கிராமிய மட்ட பொதுநூலகங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் ஒரு பொது நூலகத்தின் பண்பு என்பன முன்மொழியப்பட்டுள்ளன. அகவிழி எனும் சஞ்சிகையில்(ஒக்டோபர் 2008) திரு.ம.இராசதுரை அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில் ''பாடசாலை நூலகங்களும் ஆசிரிய நூலகர்களும்'' என்ற தலைப்பில் இன்றைய கால பாடசாலை நூலகங்களின் நிலைப்பாடு பற்றியும் அதனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் எவை என்பது பற்றியும் அத்தோடு நூலக ஆசிரியர்களின் பங்களிப்பு பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

மேலும் அகவிழி எனும் சஞ்சிகையில் (ஒக்டோபர் 2009) அ.ஸ்ரீ காந்தலட்சுமி அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில் ''பாடசாலை நூலகங்கள் புதுயுகம் தரும் பெரும் பொறுப்புகள்'' எனும் தலைப்பில் நூலகங்கள் எவ்வாறு நவீனமயப்படுத்தப்பட வேண்டும் எனவும் மேலும் புதுயுகத்திற்கு ஏற்றவாறு பரிமாணங்களை உள்வாங்க வேண்டும் எனவும் வழிகாட்டப்படடுள்ளன. உண்மை உதயம் சஞ்சிகையில் (மே 2018) ஆ.ளு.ஆ. ஹில்மி அவர்களால் எழுதப்பட்ட ''புத்தகம் ஓர் அறிவியல் ஆயுதம்'' என்ற தலைப்பில் வாசிப்பு, நூல்களின் அவசியம் மற்றும் வாசிப்பின் மூலமே நூல்கள் உருவாகியன என்பன குறித்து பேசப்பட்டன. சி.சரவணன் அவர்களால் எழுதப்பட்டு (மே 02 2017) இணையத்தளத்தில் வெளியான ''நூலகரும் மாணவரும்'' என்ற கட்டுரையில் நூலகர்களுக்கும் மாணவர்களுக்குமிடையிலான தொடர்பினை குறிப்பிட்டள்ளார். ஜனுான் அவர்களால் எழுதப்பட்டு (நவம்பர் 05 2009) இணையத்தளத்தில் வெளியான ''பாடசாலைகளில் நூலங்கள்'' என்ற கட்டுரையில் கல்வி மற்றும் நூலகம் பற்றிய தொடர்பை தெளிவுபடுத்தியுள்ளார்.


### தரவுப்பகுப்பாய்வும் பெறுபேறுகளும்

வாழைச்சேனை பிரதேசத்தில் 03 பாடசாலைகள் காணப்படுகின்றன.

- மட்/மம/வை-அஹமட் மகா வித்தியாலயம்.
- மட்/மம/ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம்.
- மட்/மம/அந்-நூர் தேசிய கல்லூரி.

அவற்றில் நூலகங்களுக்கென தனியானதோர் அறை ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் மாணவர்களை கவரக்கூடிய வகையில் , அவர்களின் வாசிப்பினை தூண்டக்கூடிய வகையிலோ அல்லது நூலகம் பற்றிய சரியான வழிகாட்டல் வழங்கப்படவோ இல்லை என்பதே கவலைக்குரிய விடயம்.

**அட்டவணை 1 : பாடசாலையில் நூலக பயன்பாடு**




| | Y-Ahamed School | Aayesha Balika School | An-Noor School |
|---|---|---|---|
| Students | 30 | 45 | 50 |
| Teachers | 45 | 70 | 90 |
| Others | 5 | 20 | 25 |

வாழைச்சேனை வை-அஹமட் வித்தியாலயம் ஆரம்ப நிலைப் பாடசாலையாக காணப்படுகிறது. 1-5 ஆம் தரம் வரையான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்கென சிறுவர் மலர், கதைப் புத்தகங்கள், சஞ்சிகைகள் கொண்ட ஓர் அறை நூலகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. நூலக பொறுப்பாளர் அதற்கென இல்லை , மாணவர்களை நூலக பாடத்திற்கு அழைத்துவரும் ஆசிரியர் அதற்கு பொருப்பாய் இருப்பர். சிறுவர்கள் விரும்பி புத்தகங்களை எடுத்து வாசிக்கும் வீதம் மிகக் குறைவு, இடவசதி, தளபாட வசதி என்பன குறைவாக காணப்படுகின்றன.

அது போன்றே ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் 1-13 வரையான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதிலும் சிறியோர் முதல் கட்டிளமைப்பருவ மாணவர்கள் வாசிப்பை தூண்டக்கூடிய சிறந்த நூல்களை காண்பது அரிது. சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட நூலகமாக இல்லை.

அந்-நூர் தேசிய கல்லூரி இங்கு நடுத்தர அளவில் சிறியோர் முதல் கட்டிளமைப்பருவத்தினர் வரை மேலும் ஆசிரியர் வழிகாட்டல் நூல்கள் என பல நூல்கள் காணப்பட்டாலும் ஆசிரியர்கள் அந் நூலத்தை பயன்படுத்த முடிந்த அளவு அவற்றினை மாணவர்கள் இலகுவாய் பயன்படுத்த முடியாத நிலை , விரைவாய் நூல்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை என்பன காணப்படுகின்றன. 02 நூலக பொறுப்பானர்கள் இங்கு உள்ளனர் அவர்களது அனுமதி பெற்றே நூலகத்திலிருந்து வாசிக்க விரும்பும் புத்தகங்களையும் எடுக்க வேண்டிய சூழல் காணப்படுகிறது. இதனால் அதிகமான மாணவர்கள் நூலகம் வருவதற்கு விரும்புவதில்லை (காண்க : அட்டவணை 1).

நேர்காணல் மற்றும் வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பாடசாலை நூலகங்ளை அதிகம் பயன்படுத்துவோர் ஆசிரியர்களாகவே உள்ளனர். அனைத்து பாடசாலைகளிலும் 40% ற்கு மேற்பட்டோர் தங்கள் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக பாடசாலை நூலகங்ளை பயன்படுத்துகின்றனர்.

மேலும் பாடசாலை மாணவர்கள் கல்வி செயற்பாட்டில் அபிவிருத்தி செய்வது தொடர்பில் அவர்களது நூலகப்பயன்பாடு எவ்வாறு காணப்படுகின்றது என்பது பற்றி அறிய வினாக்கொத்தினூடாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பின்வரும் தரவு பெறப்பட்டுள்ளது (காண்க : அட்டவணை 2).

**அட்டவணை 2: தரவின் அடிப்படையில் வருகை தரும் மாணவர் எண்ணிக்கை**

| தடவைகள் | தினமும் | வாரம் ஒருமுறை | மாதம் ஒருமுறை | வேறு |
|---|---|---|---|---|
| மாணவர்கள் எண்ணிக்கை | 05 | 07 | 14 | 02 |


குறிப்பிட்ட ஆய்வுக்கு உட்படுத்திய 30 மாணவர்களுள் நூலகத்திற்கு வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கையை கணக்கீடு செய்த போது தினமும் நூலகம் செல்லும் மாணவர்கள் 05 பேர் என்றும், வாரம் ஒருமுறை நூலகம் செல்வோர் 07 மாணவர்கள் என்றும், மாதமொருமுறை நூலகம் செல்வோர் 14 மாணவர்கள் இன்னும் சிலர் வேறுவகையான தடவையில் நூலகம் செல்வோர் 02 மாணவர்கள் என்றும் அவர்களிடம் பெறப்பட்ட முடிவாகும்.எனினும் இவற்றினூடாக மாதமொருமுறை செல்வோரின் எண்ணிக்கையே அதிகமானதாகவும் தினமும் செல்வோரின் எண்ணிக்கை குறைவாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் நூலகப்பயன்பாடு அரிதாகவே காணப்படுவதை இனங்காணலாம். இது தவிர்த்து வாழைச்சேனை பிரதேச சபையின் கீழ் இயங்கும்

- பொது நூலகம்
- அல்-இக்பால் சன சமூக நிலைய வாசிப்பு மையம்
- பேத்தாழை பொது நூலகம் என மொத்தமாக 06 நூலகங்கள் வாழைச்சேனை பிரதேசத்தில் காணப்படுகிறது.

இந் நூலகங்களது பயன்பாடும் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்படுகிறது. வாசிப்பினதும்,தேடிக் கற்றலினதும் பெறுமதி உணரப்படாமையே இதற்கான மிக முக்கிய காரணமாகும். கிராமிய மட்டத்தில் காணப்படும் பொது நூலகங்களினை மாணவர்கள், பொது மக்கள் எந்தளவு பயன்படுத்துகின்றனர் என்ற நேர்காணலில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நல்ல நூல்களை கொண்ட நூலகங்களை இளம் பராயத்தினர் அதிகம் ஆதரிக்கின்றனர். வுாழைச்சேனை பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள ‘‘பேத்தாழை பொது நூலகம்’’ 14 – 26 வயதுக்குட்பட்டோரால் அதிகம் விரும்பப்படும் நூலகமாய் காணப்படுகிறது. இங்கு 85% மானோர் இவர்களே வருகை தருகின்றனர். 06 – 14 வயதுக்குட்பட்டோர் அதிகம் நூலகங்களை நாட்டம் கொள்ளாதோராகவும்,26 – 45 வயதுக்குட்பட்டோர் அதிகம் சஞ்சிகைகளுக்காகவே அதிகம் நூலகங்களை நாடுகின்றனர். இவ் வயது மட்டத்தினர் வாழைச்சேனை பிரதேச சபையின் கீழ் இயங்கும் பொது நூலகத்திற்கு 35% மானோரும், பேத்தாழை.

பொது நூலகத்திற்கு 70% மானோரும், சன சமூக நிலைய வாசிப்பு மையத்திற்கு 10% மானோரும் வருகை தருகின்றனர். 45 வயதுக்கு மேற்பட்டோர் தங்கள் முக்கிய தேவைக்காக மட்டும் நூலகங்களை பயன்படுத்துகின்றனர் (காண்க: அட்டவணை 3).

**அட்டவணை 3 : ஏனைய அரசு சார் நூலகங்களை பயன்படுத்துவோர் வீதம்**




| Age Limit | Prathesia Sabha Common Library | Pethalai Common Library | Sana Samuha Reading Center |
|---|---|---|---|
| [illegible] | 0 | 25 | 0 |
| 14 - 26 | 15 | 85 | 0 |
| 26 - 45 | 35 | 70 | 10 |
| 45 - Others | 25 | 45 | 20 |

மேலும் பாடசாலை மாணவர்கள், நூலக ஊழியர்கள், பொதுமக்கள் போன்றோரிடம் நூலகங்களைப் பயன்படுத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றி வினவியபோது அவர்கள் முன்வைத்த சவால்களில் குறிப்பான சில பின்வருமாறு:

**இடப்பற்றாக்குறை**: வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள அனைத்து நூலகத்தினதும் பொதுவான பிரச்சனையாய் இது காணப்படுகிறது. சன சமூக நிலையத்தில் இயங்கிய நூலகம் இடப்பற்றாக்குறை காரணமாக அங்கிருந்த 2000 புத்தகங்கள், பொது நூலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது. தற்போது நாளாந்த சஞ்சிகை மட்டுமே இங்கு உள்ளது.

**வருடாந்த நிதி ஒதுக்கீடு:** இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் நூலகத்துறைக்கு வழங்கப்படும் நிதி ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவானதே . கிராமிய மட்டத்தில் காணப்படும் நூலகங்களை சிறந்த முறையில் கட்டமைக்க அவை போதுமானதாக காணப்படுவதில்லை.பயன்பாட்டை பணப்பெறுமதியில் அளவிட முடியாத துறை இதுவாகும். சமூகத்தில் சிறந்த பிரஜையை உருவாக்கும் சேவையை இது வழங்குகிறது. இத் துறைக்கு தரப்படும் முதலீடானது வர்த்தகதுறை போன்று இலாபமீட்டாது. வெள்ளை யானைக்கு தீனிபோடுவது போல் இத் துறைக்கு மேற்கொள்ளப்படும் நிதி ஒதுக்கீடும் வரவிலாச் செலவாகவே கணக்கிடப்பவதால் நிதிப்பற்றாக்குறை என்றும் நிலவப்போகும் ஓர் தொடர் கதைதான் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், சமூக நல ஸ்தாபனங்கள் என்பவற்றின் உதவியுடன் இப் பிரச்சினையை தீர்க்கலாம். மேலும் வருட இறுதியில் நிதி வழங்கப்படுவதால் பெறுமதிமிக்க புத்தகங்களை கொள்வனவு செய்வதில் பிரச்சனை நிலவுகிறது.

**பிழையான பராமரிப்பு கலாச்சாரம்:** நூலகங்களை பராமரிப்பதில் உள்ள ஊழியர்களின் அசமந்தப் போக்கும் நூலகங்கள் இன்று வரை வளர்ச்சி அடையாமலிருக்க காரணமாயுள்ளது.


**சிதைவடைந்த தளபாடங்கள் :** நிதி பற்றாக்குறை காரணமாக சிதைவடைந்த மேசை, கதிரை என்பவற்றை சரிசெய்திலும், புதிய தளபாடங்களை கொள்வனவு செய்வதிலும் சிக்கல் காணப்படுகிறது.

**”’ரணமடையாத கட்டட நிர்மாணம் :** வருமான பற்றாக்குறை காரணமாக சனசமூக நிலையத்தினது சாதாரண கட்டடம் கூட ”’ரணமாய் நிர்மாணிக்கப்படாத நிலையிலுள்ளது.

**நூலக ஊழியர்களின் அலட்சிய மனப்பாங்கு :** நூலகத்தின் முக்கியத்துவம் பற்றி இன்று வரை மக்கள் அறியாதிருக்க காரணம் நூலக ஊழியர்கள் சரியான திட்டங்களை முன்னெடுக்காமை ஆகும்.

**புதிதாய் வெளியான பெறுமதியான, பயன்மிக்க நூல்கள் பற்றிய அறிவின்மை :** சரியான நூலகப் பயிற்சி பெற்ற, புதிய நூல்கள் பற்றிய தெளிவுள்ள இளம் சமூகத்தினர் இதற்குள் உள்வாங்கப்படாமையும், தற்போதுள்ள ஊழியர்கள் இதுபற்றிய அறிவின்மையும் நூலகங்கள் அதன் அடையாளத்தை இழக்க முக்கிய காரணமாகும் (காண்க: அட்டவணை 4).

**அட்டவணை 4 : நூலக ஊழியர்களிடையே நூலகம் பற்றிய அறிவு வீதம்**




**தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப வசதி குறைவு :** தற்போதைய தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் விருத்தி அடைந்த உலகில் அனைத்து விடயங்களும் அருந்த இடத்தில் இருந்தவாறே அணுகக் கூடிய நிலைக்கு மாற்றமடைந்துள்ளது. ஆனால் கிராமப்புற நூலகங்கள் குறிப்பாக வாழைச்சேனை கிராமத்தில் பேத்தாழை நூலகம் தவிர்ந்த வேறு எந்த நூலகத்திலும் அடிப்படை கனணி வசதிகள் கூட அற்ற நிலை காணப்படுகிறது.



**படம் 1 : அல்-இக்பால் சன சமூக நிலைய வாசிப்பு மையம்**



**படம் 2 : பிரதேச சபையின் கீழ் இயங்கும்**



படம் 3 : பேத்தாழை பொது நூலகம்

நூலகத்தின' பௌதீக, மனித வளங்கள் பற்றிய கணக்கெடுப்பில் பெறப்பட்ட தகவல்கள் அடிப்படையில் வளப் பற்றாக்குறை என்பது தீர்வுகாண முடியா ஓர் பிரச்சனையாக காணப்படுகிறது. பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், சமூக நல ஸ்தாபனங்கள் என்பன உதவிசெய்ய முன்வரும் போதே இப் பிரச்சினையை தீர்க்க முடியும். (காண்க: அட்டவணை 4)

**அட்டவணை 4 : கணக்கெடுப்பின் அடிப்படையில் வளக்குறைபாடு**

| இல | நூலகம் | பௌதீக வளம் | | | | மனித வளம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | இடவசதி | கட்டட வசதி | நூல்கள் | நிதி | ஊழியர்கள் | அங்கத்தவர்கள் | வருகை தருவோர் |
| 01. | A | ∂ | ∂ | ∂ | ∂ | ∂ | ○ | ○ |
| 02. | B | ○ | ∂ | ○ | ∂ | ○ | = | ○ |
| 03. | C | ○ | ○ | = | ∂ | = | * | ○ |
| 04. | D | * | ○ | ○ | ∂ | ○ | = | ○ |
| 05. | E | ∂ | ∂ | ∂ | ∂ | ∂ | ∂ | ∂ |
| 06. | F | * | * | * | ○ | = | ✓ | * |

| |
|---|
| A. மட்/மம/வை-அஹமட் மகா வித்தியாலயம். |
| B. மட்/மம/ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம். |
| C. மட்/மம/அந்-நூர் தேசிய கல்லூரி. |
| D. பொது நூலகம் |
| E. சன சமூக நிலைய வாசிப்பு மையம் |
| F. பேத்தாழை பொது நூலகம் |

∂ **மிகக் குறைவு**
○ **குறைவு**
= **நடுத்தரம்**
* **போதியளவு**

## மேலதிகம்

மேற்கூறப்பட்ட யாவும் ஆய்விற்காக கொடுக்கப்பட்ட வினாக்கொத்து,நேர்காணல்கள் ஊடாக பெறப்பட்ட தகவல்களாகும்.

## முடிவுரை

ஆய்வுப்பிரதேசமான வாழைச்சேனை பிரதேச கல்வி வலயங்களுக்குட்பட்ட குறிப்பிட்ட நூலகங்களைப் பொருத்த வரையில் இலங்கை அரசாங்கம் நூலகங்களின் வளர்ச்சிக்காக பல வழிகளை மேற்கொள்வதோடு வருடா வருடம் புதிய நூற்களையும் வழங்குவதற்கான பணங்களையும் ஒதுக்கீடு செய்கின்றது. அத்தோடு நூலகர்களுக்கான பயிற்சிகளையும் வழங்குகிறது. என்றாலும் சில குறிப்பிட்ட பாடசாலைகளில்,கிராமிய மட்டத்தில் காணப்படும் நூலகங்கள் பெயரளவிலே காணப்படுகின்றன என்பது கவலைக்குரிய விடயமாகும். வெறுமனே பாடப்புத்தகங்களை நோக்காகக் கொண்டு சுருக்கப்பட்ட கல்வி நிலைமையே காணப்படுகின்றது.

மேலும் மாணவர்கள் பரீட்சையை மையப்படுத்தி தயார் படுத்தப்படுவதால் நூலகங்களுடன் அவர்களை இணைப்பை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டல்களும் விரிந்த சிந்தனையாளர்களாக அவர்களை மாற்றுவதற்கான சந்தர்ப்பங்களும் குறைவாகவே காணப்படுகின்றன. இந்நிலமையை உணர்த்துவதற்கான ஓர் முயற்சியாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆலோசனைகளும் பரிந்துரைகளும்

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகளின் படி குறிப்பிட்ட நூலகங்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கு பின்வரும் ஆலோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

- ✓ பௌதீக வளங்களை பெற்றுக் கொள்வதற்காக கிராமத்தின் தேவை, அத் தேவையை ''ர்த்தி செய்ய கூடிய நூலகதிதின் சேவை பற்றிய உணர்வும் கொண்ட அரச அதிகாரிகள்,சேவை மனப்பான்மை கொண்ட மக்களின் உதவியை பெற்றுக்கொள்ளல்.
- ✓ நூலகத்துறையில் பயிற்சி பெற்ற தொண்டுள்ளம் கொண்ட ஊழியர்களை பெற்றுக் கொள்ளல்.
- ✓ உள்;ர் படைப்புகளுக்கு (நூல்கள், சஞ்சிகைகளுக்கு) அதிக முக்கியத்துவம் கொடுத்தல்.
- ✓ தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப அறிவை வளர்த்து கொள்வதற்கான வழிவகைகளை நூலக ஊழியர்களுக்கு ஏற்படுத்தி கொடுத்தல்.
- ✓ நூலகமும் கல்வியும் ஒன்றுக்கொன்று இணையான விடயங்கள் என்ற எண்ணக்கரு மாணவர்களிடம் விதைக்கப்பட வேண்டும். மேலும் ஒரு சிறந்த கல்வி நிலையமானது கற்கும் மாணவனுக்கு பலவற்றையும் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாணவர்களை அறிஞர்களாக ஆக்குவதில் வகுப்பறைக்கு இணையானது நூலகம் என்ற ஆணித்தரமான கருத்தை மாணவர்களிடத்தில் விதைக்க வேண்டும்.பாடநூல்கள் கற்க வேண்டியவற்றின் ஒரு பகுதியை மட்டுமே சுட்டிக்காட்டும் ஏனைய பகுதிகளையும் கண்டறிய மாணவனுக்கு துணை நல்குபவனே ‘‘இணைப்படிப்புக்கள்’’ தாம் என்று ஆசிரியர் மாணவனுக்கு தெளிவுபடுத்த வேண்டும். பள்ளிக்கல்வியில் இணைக்கல்வி என்பது முதன்மையாக நூலகக் கல்வியைக் குறிப்பிடும் மாணவர்களின் பாடவேளையில் நூலகத்திற்கென்று ஒதுக்கப்பட்ட பாடவேளையை மாணவர்களை பயன்படுத்த துாண்டுதல்.
- ✓ நூலகச்சூழல் அமைதியாகவும், அழகாகவும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் மேலும் அங்கு சுவர்ப்பத்திரிகை ஒன்று பொருத்தப்பட்டிருத்தல் சிறந்தது.
- ✓ நூலகங்களை மாணவர்களின் மனதை கவரும் விதமாக காணப்படுவதோடு சுவர்ப்பத்திரிகை போன்றவை காட்சிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
- ✓ மாணவர்கள் தாம் வாசித்த ஒரு சில கருத்துக்களையாவது சுவர்ப்பத்திரிகைகளில்

ஆக்கங்களாக இடுவதற்கும் முன்மொழிவதற்கும் வழிகளை ஏற்படுத்திக்கொள்ளல்.

- ✓ அவர்களது எழுத்தாற்றலை வளர்ப்பதோடு மேலும் தேடல் செயற்பாடுகளில் ஆர்வமூட்டல். மேற்படி நூல்களை அதிகமாக பயன்படுத்தியோர் அதிக நூல்களை வாசித்தோருக்கு ஊக்குவித்தல் பரிசு வழங்கல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**உசாத்துணைகள்**

செல்வராஜா, என்.( 1989 ) “கிராமிய நூலகங்களும், அபிவிருத்தியும்” அயோத்தி நூலக சேவைகள் , ஆனைக்கோட்டை, இலங்கை.

பெர்னான்ட் வவ்ரெக்.(1995) *“Rural & small libraries:providers for lifelong learning”,* கலொரியன் பல்கலைக்கழகம், தேசிய நிறுவனம், வோஷிங்டன்.

பைறூஸ், எம்.பீ.எம் (2003) “நூலகங்களில் தகவல் தொழிநுட்பம்”

சில்வஸ்டர் ஒ.அனி (2014) *“Improving Public Library Services for Rural Community Development”*ஆய்வுக்கட்டுரை.

நௌபியா,எம்.வை.எப், ஹ{ஸ்னா,எம்.எச். & நபீஸ்,எ].எம்.எம். (2018) “முஸ்லிம் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பாடசாலை நூலகங்களின் பங்களிப்பு”, ஆய்வுக்கட்டுரை, இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில், பக்கங்கள் 476 – 485.

ஹில்மி,எம்.எஸ்.எம் (2018) புத்தகம் ஓர் அறிவியல் ஆயுதம். இலங்கை: உண்மை உதயம்.

இம்தாத் பஸர்.(2013) இஸ்லாமிய வரலாற்றில் நூலகங்களும் வாசிப்பும்,வைகறை சஞ்சிகை,(ஒகஸ்ட்-ஒக்டோபர், இதழ்: 31).

செல்வராஜா,என்.(2014) பாடசாலை நூலகங்களும் எமது சமூகத்தின் வாசிப்புத் திறனும்: https://www.thesamnet.co.uk/2016 அணுகல் (04.07.2021)

பர்ஹான் மன்ஸ˜ர்.(2012) இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தில் நூலகங்கள்.: https://www.lankamuslim.org/2016 அணுகல˙ (08.09.2021)

வைகறை சஞ்சிகை, பர்ஹான் மன்ஸ˜ர்.(2016) பாடசாலை நூலகம்.

அகவிழி சஞ்சிகை, இராசதுரை,ம.(2008). பாடசாலை நூலகங்களும் ஆசிரிய நூலகர்களும். (ஒக்டோபர்)

இஸ்லாமிய சிந்தனை சஞ்சிகை, ஸ˜பைர்,எம்.ஐ.எம்.(1994) நூலகங்களின் வளர்ச்சிக்கு முஸ்லிங்களின் பங்களிப்பு. (ஜனவரி - மார்ச், மலர்:16)

எழுகதிர் வெளியீடு, ஜனூன்.(2009),பாடசாலைகளில் நூலகங்கள், தினகரன் இணையப்பதிப்பு,https://www.archives.thinakaran.lk/2009 அணுகல்(06.11.2009)

ஹலர் முஹம்மத் அதாஉல்லா,(1989) பைத்துல் ஹிக்மா பீ அஸ்றில் அப்பாஸி. தாருல் பிக்ருல் அறபி.கெங்ரோ.